# T-16/T-22/T-41-பொதுத் தமிழ் : திருப்புதல் தேர்வு

Download PDF

1) ‘உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும்’ என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. ஊக்கம்
- B. அழுக்காறு
- C. ஒழுக்கம்
- D. கல்வி
- E. விடை தெரியவில்லை

2) “அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே! முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!” - என்ற பாடலின் ஆசிரியர் யார்?

- A. பாரதிதாசன்
- B. வாணிதாசன்
- C. கண்ணதாசன்
- D. பெருஞ்சித்திரனார்
- E. விடை தெரியவில்லை

3) திருவள்ளுவர் குறிப்பிடும் “நிறையுடைமை” யாது?

- A. வாழ்க்கையில் வெற்றி
- B. கல்வி பெறுதல்
- C. செல்வ நிறைவு
- D. நற்பண்புகளின் நிறைவு
- E. விடை தெரியவில்லை

4) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு - இக்குறளடியில் “தொட்டனைத்து” என்பதன் பொருள் ________

- A. தோண்டும் அளவிற்கு
- B. தொடும் அளவிற்கு
- C. விடியும் வரையில்
- D. போதுமென்ற அளவில்
- E. விடை தெரியவில்லை

5) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று <u>விடல்</u> - இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணம் யாது?

- A. வினைமுற்று
- B. பெயரெச்சம்
- C. தொழிற்பெயர்
- D. வியங்கோள் வினைமுற்று
- E. விடை தெரியவில்லை

6) கீழ்க்கண்டவற்றுள் ‘மீதூண் விரும்பேல்’ - இவ்வடியின் பொருள் யாது?

- A. குறைவான உணவு உட்கொள்ளுதல் கூடாது.
- B. மிகுதியான உணவை உண்ணாதே.
- C. மிக அதிகமாக உண்ண வேண்டும்
- D. காலையிலும், இரவிலும் குறைவாகவும் மதியம் அதிகமாகவும் உண்ண வேண்டும்.
- E. விடை தெரியவில்லை

7) கீழ்க்கண்டவற்றுள் டி.கே.சி பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் வாழ்ந்த காலம் 1881 முதல் 1964 வரை.

2. இவர் 1927-ல் சென்னை மாகாணத்தில் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இவர் ரேடியோ என்ற சொல்லுக்குத் தமிழில் ‘வானொலி’ என்ற சொல்லை முன்மொழிந்தார்.
4. இவர் இதய ஒலி, கம்பர் யார்? ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- A. 1 மற்றும் 2
- B. 2, 3 மற்றும் 4
- C. 1, 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

8) பாவாணரது ஆய்வுப் புலத்தின் இரண்டு கண்களாகக் கருதப்பட்டவை எவை?

- A. மொழி ஆய்வு மற்றும் அகரமுதலி ஆய்வு
- B. மாந்தன் தோற்றம் மற்றும் பழந்தமிழர் நாகரிக ஆய்வும்
- C. இலக்கியம் மற்றும் இலக்கண ஆய்வு
- D. வழிபாடு மற்றும் சடங்குகள் ஆய்வு
- E. விடை தெரியவில்லை

9) உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று - இக்குறளடியில் ‘ஊக்கம்’ என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. செல்வம்
- B. உழைப்பு
- C. மனவெழுச்சி
- D. புத்துணர்வு
- E. விடை தெரியவில்லை

10) கீழ்க்கண்டவற்றுள் நாமக்கல் கவிஞர் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவரின் காலம் 19.10.1888 முதல் 24.4.1972 வரை.
2. இவருடைய பாடல்கள் 1997-ஆம் ஆண்டு நாட்டுடமை ஆக்கப்பட்டன.
3. இவர் தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கினார்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

11) “செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்” யாருக்கு விருந்தினராக அமைவான் என்று வள்ளுவர் கூறுகிறார்?

- A. அரசனுக்கு
- B. தேவர்களுக்கு
- C. செல்வந்தருக்கு
- D. சான்றோருக்கு
- E. விடை தெரியவில்லை

12) கூற்று 1 : வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம், ‘குட்டித் தொல்காப்பியம்’ என
அழைக்கப்படும் பெருமையுடையது..
கூற்று 2 : இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால்; “சுவடி
தேடும் சாமியார்” எனவும் அழைக்கப்பட்டார்

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

13) கீழ்க்கண்டவற்றுள் நாமக்கல் கவிஞர் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் முதன் முதலாக வரைந்த படம் இராமகிருஷ்ண பரமஹம்சர்.
2. இவர் லோகமித்திரன் இதழை கோவிந்தராசு ஐயங்காரிடம் இணைந்து நடத்தினார்.
3. இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கியுள்ளது.

- A. 1 மற்றும் 2

- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

14) எவற்றைத் தருவதால் அறம் மிகச் சிறப்புடையதாக உள்ளது எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. குடிமை
- B. சிறப்பு
- C. செல்வம்
- D. B மற்றும் C
- E. விடை தெரியவில்லை

15) “இரத்தலின் இன்னாது” என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. இரப்போர்க்கு இல்லை என்பது
- B. சேமிப்பில் மட்டும் கவனமுடைதல்
- C. உலோபித்தனம்
- D. பகிர்தல் இன்றித் தானே உண்பது
- E. விடை தெரியவில்லை

16) கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
1. ‘ஸ’ எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது.
2. மெய்யைக் குறிக்கப் புள்ளிகள் பயன்படுத்தப் பட்டன.
3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.
4. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்

- A. 1 மற்றும் 2
- B. 1, 2 மற்றும் 4
- C. 1, 3 மற்றும் 4
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

17) “வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. பாரதியார்
- B. பாரதிதாசன்
- C. வெ. இராமலிங்கனார்
- D. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- E. விடை தெரியவில்லை

18) “திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்கள்” என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. அன்புடையோர்
- B. அறிவு முதிர்ச்சியுடையோர்
- C. ஆர்வமிகு நண்பர்கள்
- D. உற்றார்
- E. விடை தெரியவில்லை

19) “அயலார் தமக்கும் அன்பே செய்யும்;
நாணம் கெடாமல் நட்புகொண் டாடும்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. தாராபாரதி
- B. வெ. இராமலிங்கனார்
- C. முடியரசன்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

20) “உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சி” இக்குறளடியில் “உறைசிறியார்” எவர்?

- A. வலிமையற்றவர்கள்
- B. வலிமையானவர்கள்
- C. அறிஞர்கள்
- D. அறிவிலிகள்
- E. விடை தெரியவில்லை

21) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. தமிழ்த் தேர்
- B. தேமதுரத் தமிழோசை
- C. இன்ப இலக்கியம்
- D. இலக்கிய இன்பம்
- E. விடை தெரியவில்லை

22) “வகையறிந்து வல்லவை <u>வாய்சோரார்</u>” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சீரின் பொருள் யாது?

- A. பிறர்க்குத் தீங்கு செய்யார்
- B. பொய் பேசமாட்டார்
- C. பிழைபடப் பேசமாட்டார்
- D. தவறாக நடந்து கொள்ளாதார்
- E. விடை தெரியவில்லை

23) மொஹெஞ்சோதாரோ என்னும் சிந்து சமவெளியில் வாழ்ந்த நாகரிக மக்கள் பேசிய மொழியை “தொல் திராவிட மொழி” எனக் கூற வேண்டும் என்று கருத்து தெரிவித்தவர் யார்?

- A. இராபர்ட் கால்டுவெல்
- B. மாக்ஸ் முல்லர்
- C. ஹீராஸ் பாதிரியார்
- D. பிரான்சிஸ் எல்லிஸ்
- E. விடை தெரியவில்லை

24) “நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்” எத்தகைய தன்மையுடையவர்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. பொறுமைக் குணத்தைப் போற்றுவர்
- B. பகைவரின் தீமைகளைப் பொறுத்திருப்பர்
- C. பழகியோர் நஞ்சையே தந்தாலும் உண்பர்
- D. பகைவரிடமும் பண்பு பாராட்டுவர்
- E. விடை தெரியவில்லை

25) “கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்” - என்று கூறியவர் யார்?

- A. மகாகவி பாரதியார்
- B. வெ. இராமலிங்கனார்
- C. கண்ணதாசன்
- D. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்
- E. விடை தெரியவில்லை

26) அன்பிற்குரியோரின் உள்ளன்பை வெளிப்படுத்தும் ஒன்று என வள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. கண்ணோட்டம்
- B. அறிவு
- C. அன்பு
- D. கண்ணீர்
- E. விடை தெரியவில்லை

27) இன்றும் அச்சிடப்படாத நூல்களாக, பிரான்சு தேசிய நூலகத்தில் உள்ளதாகத் தனிநாயகம் அடிகளால் குறிப்பிடப்பட்ட நூல்களில் பொருந்தாதது எது?

- A. மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்

- B. சரளிப்புத்தகம்
- C. புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ்
- D. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்
- E. விடை தெரியவில்லை

28) அழியாச் செல்வமாக வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. ஈகை
- B. அன்பு
- C. கல்வி
- D. நட்பு
- E. விடை தெரியவில்லை

29) கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?
1. சங்கொலி - கவிதை நூல்
2. மலைக் கள்ளன் - மர்ம நாவல்
3. என் கதை - கட்டுரை

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

30) தக்கார் தகவிலர் என்பது அவரவர்
_______ காணப் படும் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. மிச்சத்தாற்
- B. மதலையால்
- C. மக்களால்
- D. எச்சத்தாற்
- E. விடை தெரியவில்லை

31) பொருத்துக.
சான்றோர் காலம்
(a) கண்ணதாசன் 1. 1888-1972
(b) நாமக்கல் கவிஞர் 2. 1930-1959
(c) கல்யாணசுந்தரம் 3. 1891-1964
(d) பாரதிதாசன் 4. 1927-1981

- A. 3 4 2 1
- B. 4 1 2 3
- C. 3 2 4 1
- D. 1 2 3 4
- E. விடை தெரியவில்லை

32) உலகம் பழித்தது ஒழித்து விடின் எவற்றையெல்லாம் வேண்டாம் என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. மொட்டையடித்தல்
- B. சடைவளர்த்தல்
- C. மந்திரம் கூறுதல்
- D. A மற்றும் B
- E. விடை தெரியவில்லை

33) பொருத்துக. (நாமக்கல் கவிஞரின் படைப்புகள்)
(a) கட்டுரைகள் 1. பத்து
(b) இலக்கியத்திறனாய்வுகள் 2. பன்னிரண்டு
(c) கவிதைத்தொகுப்புகள் 3. ஏழு
(d) புதினங்கள் 4. ஐந்து

- A. 2 1 3 4
- B. 1 2 4 3
- C. 3 4 1 2
- D. 2 3 1 4

- E. விடை தெரியவில்லை

34) நிறைந்த அறிவாற்றல் இல்லாமல் சான்றோர் அவையில் பேசுவதை வள்ளுவர் எதனுடன் ஒப்பிடுகிறார்?

- A. அன்பின்றி வாழ்தல்
- B. கோல் இன்றி ஆடுதல்
- C. அரங்கின்றி வட்டாடுதல்
- D. உழைப்பின்றி வாழ்தல்
- E. விடை தெரியவில்லை

35) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) தழீஇ 1. கெடாதவாறு
(b) ஓச்சும் 2. குற்றம்
(c) முட்டா 3. எளிமை
(d) எண்பதம் 4. செலுத்தும்
(e) வடு 5. அணைத்து

- A. 1 2 3 4 5
- B. 2 1 5 3 4
- C. 5 4 1 3 2
- D. 4 5 3 2 1
- E. விடை தெரியவில்லை

36) 'தாயார் கொடுத்த தனம்' - என்ற நூலின் ஆசிரியர் யார்?

- A. மக்கள் கவிஞர்
- B. தேசியக் கவிஞர்
- C. காந்தியக் கவிஞர்
- D. புரட்சிக் கவிஞர்
- E. விடை தெரியவில்லை

37) உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு - இத்திருக்குறள் பயின்று வரும் அதிகாரம் எது?

- A. அன்புடைமை
- B. ஒழுக்கமுடைமை
- C. பண்புடைமை
- D. செங்கோன்மை
- E. விடை தெரியவில்லை

38) பொருத்துக. (நூல்கள்)
(a) மக்கள் கவிஞர் 1. நல்ல தீர்ப்பு
(b) தேசியக் கவிஞர் 2. செய்யும் தொழிலே தெய்வம்
(c) காந்தியக் கவிஞர் 3. சின்ன சங்கரன் கதை
(d) புரட்சிக் கவிஞர் 4. பிரார்த்தனை

- A. 2 1 3 4
- B. 2 3 4 1
- C. 3 4 1 2
- D. 2 4 3 1
- E. விடை தெரியவில்லை

39) தமிழ்ப் பழமொழிகளையும், நாடோடிப் பாடல்களையும் சேகரித்துக் கொடுத்து ஒரு பல்கலைக்கழகம் செய்யும் பணியை தனியொருவராகச் செய்து தமிழ்த் தொண்டு செய்தவர் யார்?

- A. குன்றக்குடி அடிகளார்
- B. தமிழ் ஒளி
- C. நாமக்கல் கவிஞர்
- D. கி.வா. ஜகந்நாதன்
- E. விடை தெரியவில்லை

40) "<u>மருவுக</u> மாசற்றார் கேண்மை" - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் யாது?

- A. கொள்க

- B. ஒருவுக
- C. பொருத்துக
- D. முயல்க
- E. விடை தெரியவில்லை

41) பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
________ கூறப் படும் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. அறன்தெரிந்து
- B. திறன்தெரிந்து
- C. அறன்நோக்கி
- D. நெஞ்சத்தான்
- E. விடை தெரியவில்லை

42) பொருத்துக.
ஆசிரியர் நூல்
(a) பாவேந்தர் 1. அம்பிகை அழகுதரிசனம்
(b) தாராபாரதி 2. குறட்செல்வம்
(c) குன்றக்குடி அடிகளார் 3. இது எங்கள் கிழக்கு
(d) கண்ணதாசன் 4. முல்லைக் காடு

- A. 4 3 2 1
- B. 3 4 2 1
- C. 4 3 1 2
- D. 1 2 3 4
- E. விடை தெரியவில்லை

43) “இயல்பாய் அமைந்தும் <u>இன்பசொரூபமாய்த்</u> தாயாய்
நின்று தரணியைத் தாங்கும்” - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பைத் தேர்க.

- A. வினைத்தொகை
- B. உருவகம்
- C. எண்ணும்மை
- D. இரண்டாம் வேற்றுமைத் தொகை
- E. விடை தெரியவில்லை

44) “விண்ணிலும் மண்ணிலும் விளைவுகளே - இவை
வேலைகளல்ல; வேள்விகளே” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. தாராபாரதி
- C. முடியரசன்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

45) “என்றும் இடும்பை தரும்” என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. புறங்கூறுதல்
- B. அழுக்காறு
- C. தீயொழுக்கம்
- D. சோம்பல் குணம்
- E. விடை தெரியவில்லை

46) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றைத் தேர்க.
1. பாரதிதாசன் காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராகப் பதவியேற்றார்.
2. முடியரசன் காரைக்குடியில் மீ.சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணி ஆற்றினார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

47) “பொறுத்தல் இறப்பினை என்றும்” இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொல் உணர்த்தும் பொருள் யாது?

- A. நன்மையை
- B. புகழை
- C. தீமையை
- D. பழியை
- E. விடை தெரியவில்லை

48) மைசூர் ஹைதர் அலியிடம் வேலு நாச்சியார் உதவி கோரிக் கடிதம் எழுதிய மொழி?

- A. தமிழ்
- B. தெலுங்கு
- C. பிரெஞ்சு
- D. உருது
- E. விடை தெரியவில்லை

49) கீழ்க்கண்டவற்றுள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர்.
2. இவருடைய பாடல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டுள்ளன.
3. இவர் திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

50) “உரம்” இல்லாதவர் திருவள்ளுவத்தால் எதற்கு ஒப்பிடப்படுகிறார்?

- A. விலங்குக்கு
- B. மரத்திற்கு
- C. நெருப்புக்கு
- D. நிழலுக்கு
- E. விடை தெரியவில்லை

51) வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று- இத்திருக்குறள் பயின்றுவரும் அதிகாரம் எது?

- A. மக்கட்பேறு
- B. இல்வாழ்க்கை
- C. விருந்தோம்பல்
- D. உழவு
- E. விடை தெரியவில்லை

52) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைத் தேர்க.
1. கவியரசு கண்ணதாசன் தமிழ்ச்சங்கம் சார்பில் கண்ணதாசன் விருதைப் பெற்ற முதல் கவிஞர் வைரமுத்து.
2. தமிழக அரசால் வழங்கப்படும் திருவள்ளுவர் விருதைப் பெற்ற முதல் அறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவார் .
3. தமிழக அரசால் வழங்கப்படும் பாரதிதாசன் விருதைப் பெற்ற முதல் கவிஞர் சுரதா.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. 1, 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

53) கீழ்க்கண்டவற்றில் முடியரசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவருக்கு ‘கவியரசு’ என்ற பட்டத்தை குன்றக்குடி அடிகளார் வழங்கினார்.
2. இவர் தமது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டா என்றே உரைத்து, அவ்வாறே நிறை வேறச் செய்தவர்.
3. இவரின் கவிதைகளைச் சாகித்திய அகாதெமி சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து
வெளியிட்டுள்ளது.

- A. 1 மட்டும்

- B. 1 மற்றும் 2
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

54) நாள்தோறும் குயில்தோப்புக்குச் சென்று பாரதிதாசனிடம் தாம் எழுதிய கவிதைகளைப் படித்துக் காட்டிப் பாராட்டு பெற்றவர் யார்?

- A. தமிழ் ஒளி
- B. தருமு சிவராமு
- C. வாணிதாசன்
- D. முடியரசன்
- E. விடை தெரியவில்லை

55) “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி” என்ற பாடலடிகள் மூலம் தமிழினத்தின் தொன்மையைக் கூறும் நூல் எது?

- A. பட்டினப் பாலை
- B. புறநானூறு
- C. புறப்பொருள் வெண்பா மாலை
- D. சிலப்பதிகாரம்
- E. விடை தெரியவில்லை

56) பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகியவற்றுக்கு இடங்கொடுக்காமல் வாழ்வதே சிறந்தது என்று திருவள்ளுவர் எந்த அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்?

- A. செங்கோன்மை
- B. நடுவுநிலைமை
- C. கண்ணோட்டம்
- D. அறன் வலியுறுத்தல்
- E. விடை தெரியவில்லை

57) வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து - இக்குறட்பாவிற்கு ஏற்ற பொருளைத் தேர்வு செய்க.

- A. பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும்
  பிறக்குக் கொடுப்பதே சிறந்தது
- B. யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு
  உடையவனிடம் உண்டு.
- C. பொருள் வேண்டும் என்ற இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் இரந்து கேட்கப்படுவதும் துன்பமானது.
- D. வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும்
  தன்மை உடையது.
- E. விடை தெரியவில்லை

58) பொருத்துக.
(a) மதியாதார் முற்றம் 1. கூடுவது கோடிபெறும்
(b) உபசரிக்காதார் மனையில் 2. மிதியாமை கோடிபெறும்
(c) குடிப்பிறந்தார் தம்மோடு 3. சொன்ன சொல் தவறாமை கோடிபெறும்
(d) கோடானு கோடி கொடுப்பினும் 4. உண்ணாமை கோடிபெறும்

- A. 2 1 3 4
- B. 2 4 1 3
- C. 2 1 4 3
- D. 4 1 3 2
- E. விடை தெரியவில்லை

59) கீழ்க்கண்டவற்றுள் கி.வா.ஜகந்நாதன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் வாழ்ந்த காலம் ஏப்ரல் 11, 1906 முதல் நவம்பர் 4, 1988 வரை.

2. இவர் தமிழறிஞர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் மாணாக்கராவார்.
3. இவர் 1933-இல் வித்துவான் பட்டம் பெற்றார்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

60) பொருத்துக. (சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஆண்டு)
(a) வீரர் உலகம் 1. 1973
(b) பிசிராந்தையார் 2. 1980
(c) சேரமான் காதலி 3. 1967
(d) வேருக்கு நீர் 4. 1969

- A. 3 4 2 1
- B. 1 3 4 2
- C. 2 1 4 3
- D. 3 2 4 1
- E. விடை தெரியவில்லை

61) பலரைப் பகைத்துக் கொள்வதைவிடப் பலமடங்கு தீமையானது எது?

- A. உறவுகளைப் பகைத்துக் கொள்வது
- B. நண்பர்களைக் கைவிடுவது
- C. இடிப்பார் இல்லாமல் இருப்பது
- D. நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது
- E. விடை தெரியவில்லை

62) “தூங்குக தூங்கிச் செயற்பால” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருளைத் தேர்க

- A. உறங்குக
- B. காலம் தாழ்த்துக
- C. ஓய்வெடுக்க
- D. தொடங்குக
- E. விடை தெரியவில்லை

63) “கல்லாதவரின் கடைஎன்ப” - குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் யாது?

- A. தலை
- B. இழிவு
- C. பெருமை
- D. சிறப்பு
- E. விடை தெரியவில்லை

64) “கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்
நவைஇன்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்!” - அடிக்கோடிட்ட சொற்களின் சொற்பொருளைத் தேர்க.

- A. விடுதலை, உலகம்
- B. பளபளப்பான கல், குற்றம்
- C. உலகம், பளபளப்பான கல்
- D. விடுதலை, குற்றம்
- E. விடை தெரியவில்லை

65) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைத் தேர்க.
1. ‘திரை ஒலி’ இதழின் ஆசிரியர் கண்ணதாசன்.
2. ‘மக்கள் சிந்தனை’ இதழின் ஆசிரியர் தமிழ் ஒளி.
3. ‘சனயுகம்’ இதழின் ஆசிரியர் குன்றக்குடி அடிகளார்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. எதுவுமில்லை

- E. விடை தெரியவில்லை

66) ‘தேசம் உடுத்திய நூலாடை’ - எனக் கவிஞர் தாராபாரதி குறிப்பிடும் நூல் எது?

- A. திருவாசகம்
- B. திருக்குறள்
- C. திரிகடுகம்
- D. திருப்பாவை
- E. விடை தெரியவில்லை

67) கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு - இக்குறளில் பயின்று வரும் அணிநயம் எது?

- A. உவமையணி
- B. ஏகதேச உருவகவணி
- C. தற்குறிப்பேற்ற அணி
- D. உருவக அணி
- E. விடை தெரியவில்லை

68) “அகத்துறுப்பு” என்று திருவள்ளுவர் குறிப்பிடும் உறுப்பு எது?

- A. அறிவு
- B. இதயம்
- C. மனம்
- D. அன்பு
- E. விடை தெரியவில்லை

69) “மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. பாரதிதாசன்
- C. முடியரசன்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

70) சிவகங்கைக் கோட்டையை வேலுநாச்சியார் மீண்டும் கைப்பற்றிய ஆண்டு எது?

- A. 1772
- B. 1778
- C. 1780
- D. 1783
- E. விடை தெரியவில்லை

71) தோழர் ஜீவானந்தம், ‘நீ மீண்டும் தோன்றிய பாரதியடா’ - என்று எந்தப் பாடல் அடிகளைக் கேட்டப் பின்னர் பாராட்டினார்?

- A. “வெற்றிமேல் வெற்றிவர விருதுவர பெருமைவர
  மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேண்டும்”
- B. “தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது, ஆனாலும் மக்கள் வயிறு காயுது”
- C. “உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
  ஒரே வழியில் கலக்குது”
- D. “பொறுமையிழந்தனர் மக்களெல்லாம்-மனம்
  பொங்கி எழுந்தனர் எரிமலை போல்”
- E. விடை தெரியவில்லை

72) கல்வியின் முதன்மைப் பிரிவுகள் இரண்டு எனக் “கல்வி” அதிகாரம் கூறுவன யாவை?

- A. எண்களினால் ஆன கணிதம்
- B. கவின்கலைகளான ஓவியம், சிற்பம்
- C. எழுத்துகள் முதலான அனைத்துப் பிரிவுகள்
- D. A மற்றும் C

- E. விடை தெரியவில்லை

73) கீழ்க்கண்டவற்றுள் ‘சமன்செய்து சீர்தூக்கும் கோல்’ என்று வள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. முகத்தல் அளவைக் கருவி
- B. நீட்டல் அளவைக் கருவி
- C. எடுத்தல் அளவைக் கருவி
- D. எண்ணல் அளவைக் கருவி
- E. விடை தெரியவில்லை

74) புனிதர் வேடமிட்டுக் கொண்டு தீயவை செய்தல் எதனைப் போன்றது என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. வேடன் புதரில் மறைந்து கொண்டு பறவைகளை வேட்டையாடுதலைப் போன்றது
- B. பசு புலித்தோலைப் போர்த்தி மேய்தலைப் போன்றது
- C. நீரில் மூழ்கி மறைந்து நடத்தலைப் போன்றது
- D. B மற்றும் C
- E. விடை தெரியவில்லை

75) “பொறுமையிழந்தனர் மக்களெல்லாம்-மனம் பொங்கி எழுந்தனர் எரிமலை போல்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. தாராபாரதி
- B. சுரதா
- C. கண்ணதாசன்
- D. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
- E. விடை தெரியவில்லை

76) மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. உழைப்பு
- B. துன்பம்
- C. இன்பம்
- D. பெருமை
- E. விடை தெரியவில்லை

77) “கூட்டுறவில் சேருங்கள் கூடி வாழப் பழகுங்கள்” - என்று கூறியவர் யார்?

- A. வெ. இராமலிங்கனார்
- B. பாரதிதாசன்
- C. குன்றக்குடி அடிகளார்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

78) “வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி” - இக்குறள் உணர்த்தும் பொருள் யாது?

- A. மழையை எதிர்பார்த்து உலக உயிர்கள் வாழ்வது போல, நல்லாட்சி செய்யும் அரசனை எதிர்பார்த்துக் குடிமக்கள் வாழ்வார்கள்.
- B. முறையான ஆட்சி நடைபெறும் நாட்டில் மழையும், விளைச்சலும் தடையின்றி கிடைக்கும்.
- C. அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.
- D. குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப்பொருந்தி உலகம் நிலை பெறும்.
- E. விடை தெரியவில்லை

79) “ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணுகின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி” - இக்கூற்றைக் கூறியவர் யார்?

- A. பாரதிதாசன்
- B. நாமக்கல் கவிஞர்
- C. தாராபாரதி

- D. முடியரசன்
- E. விடை தெரியவில்லை

80) தவறான இணையைக் கண்டறிக

- A. “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி - பாரதியார்
  போல் இனிதாவது எங்கும் காணோம்”
- B. “என்று பிறந்தவள் என்று உணராத - பாரதிதாசன்
  இயல்பினளாம் எங்கள் தாய்!”
- C. “எத்திசையும் புகழ் மணக்க இருந்த - பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை
  பெருந்தமிழ் அணங்கே!”
- D. “தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத் - பாவேந்தர்
  தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!”
- E. விடை தெரியவில்லை

81) மரம் போன்றோர் என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. மக்கட்பண்பு இல்லாதவர்
- B. நன்றியுணர்வு இல்லாதவர்
- C. ஊக்கம் இல்லாதவர்
- D. ஒழுக்கம் இல்லாதவர்
- E. விடை தெரியவில்லை

82) “நாடாது நட்டலிற் கேடில்லை” - இதில் ‘நாடாது’ என்பதன் பொருள் என்ன?

- A. விரும்பாமல்
- B. ஆராயாமல்
- C. மறக்காமல்
- D. பகைக்காமல்
- E. விடை தெரியவில்லை

83) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) ஆந்திர திராவிட பாஷைகள் 1. திருஞான சம்பந்தர்
(b) திராவிட சிசு 2. தாரநாத்
(c) திராவிடம் 3. குமரிலபட்டர்
(d) திரமிள 4. வால்மீகி

- A. 2 4 1 3
- B. 3 1 4 2
- C. 3 1 2 4
- D. 2 3 1 4
- E. விடை தெரியவில்லை

84) கீழ்க்கண்டவற்றுள் ‘நுணங்கிநூல் நோக்கி இழையா’ இத்தொடரில் ‘நுணங்கி’ என்பதன் பொருள் யாது?

- A. ஆராய்ந்து
- B. நுண்ணறிவு
- C. வணங்கி
- D. பணிந்து
- E. விடை தெரியவில்லை

85) கீழ்க்கண்டவற்றுள் கி.வா.ஜகந்நாதர் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் கலைமகள் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.
2. இவர் எழுதிய ‘வீரர் உலகம்’ என்ற நூலிற்கு 1976-ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.
3. கம்பன் கழகம் இவரது நினைவாக கி. வா. ஜ பரிசை நிறுவி வழங்கி வருகிறது.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

86) “பராக்கிரமத்தால், அன்பால்
உன்னதம் இமமலை போல்” - அடிக்கோடிட்ட சொற்களின் பொருள்கள் முறையே

- A. புகழ், இமயமலை
- B. உயர்வு, புகழ்
- C. வீரம், உயர்வு
- D. இமயமலை, உயர்வு
- E. விடை தெரியவில்லை

87) “விவசாயம் இனி இவர் வேதம்” - என்ற நூலின் ஆசிரியர் யார்?

- A. முடியரசன்
- B. தமிழ் ஒளி
- C. தாராபாரதி
- D. நாமக்கல் கவிஞர்
- E. விடை தெரியவில்லை

88) அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?

- A. பிறிதுமொழிதல் அணி
- B. தற்குறிப்பேற்ற அணி
- C. வேற்றுமை அணி
- D. உவமை அணி
- E. விடை தெரியவில்லை

89) “தன்னேர் இலாத தமிழ்!” - என்ற பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. நன்னூல்
- B. தொல்காப்பியம்
- C. தண்டியலங்காரம் மேற்கோள்
- D. வீரசோழியம்
- E. விடை தெரியவில்லை

90) “பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சீர் உணர்த்தும் பொருள் யாது?

- A. இழிந்தவர்
- B. உயர்ந்தவர்
- C. சிறியவர்
- D. பெரியவர்
- E. விடை தெரியவில்லை

91) முடியரசனை “திராவிட நாட்டின் வானம்பாடி” என்று அழைத்தவர் யார்?

- A. குன்றக்குடி அடிகளார்
- B. பெரியார்
- C. அண்ணா
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

92) பின்வருவனவற்றைப் பொருத்துக
பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்
(a) தமிழென் கிளவியும் அதனோ ரற்றே 1. சிலப்பதிகாரம்
(b) இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய 2. தொல்காப்பியம்
இதுநீ கருதினை ஆயின்
(c) மீன் எறி தூண்டிலின் நிவக்கும் கானக 3. குறுந்தொகை
நாடனொ ஆண்டு ஒழிந்தன்றே
(d) ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் 4. அப்பர் தேவாரம்

- A. 2 4 3 1
- B. 2 1 3 4
- C. 3 1 2 4
- D. 2 4 1 3

- E. விடை தெரியவில்லை

93) ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். இக்குறட்பாவில் ‘பொன்றும் துணை’ என்ற சொல்லின் பொருள் யாது?

- A. முடிந்த வரையில்
- B. இயலாத போது
- C. எப்போதும்
- D. உலகம் உள்ளவரை
- E. விடை தெரியவில்லை

94) ஒருவர் பெற்ற எல்லா வகையான செல்வங்களிலும் சிறந்ததாக வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. பொறையுடைமை
- B. பண்புடைமை
- C. ஊக்கமுடைமை
- D. அருளுடைமை
- E. விடை தெரியவில்லை

95) தமிழின் சிறப்பைக் குறிப்பிடும் பின்வரும் இணைகளில் தவறானதைக் கண்டறிக.

- A. “சிரியோரை இகழ்தல் இலமே” - கணியன் பூங்குன்றனார்
- B. “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” - திருவள்ளுவர்
- C. “காக்கை குருவி எங்கள் ஜாதி” - பாரதிதாசன்
- D. “அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்” - கம்பர்
- E. விடை தெரியவில்லை

96) மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

- A. உவமையணி
- B. எடுத்துக்காட்டு உவமையணி
- C. சொற்பொருள் பின்வரு நிலையணி
- D. பிறிது மொழிதல் அணி
- E. விடை தெரியவில்லை

97) திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் சரியானவற்றைத் தேர்க
1. ஸ்டென்கனோ
2. கே.வி. சுப்பையா
3. எல். வி.இராமசுவாமி
4. பரோ
5. ஆந்திரனோவ்
6. தெ.பொ. மீனாட்சிசுந்தரம்

- A. 1, 2, 3, 4
- B. 2, 3, 4, 5
- C. 1, 2, 5, 6
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

98) மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற - இக்குறளின் அடிப்படையில்
கூற்று

- A. : மனம் தூய்மையாயிருப்பின் அதன் வழிப்பட்ட முக்கரண வினைகளும்
  தூய்மையாயிருக்கும் ஆதலின், மாசிலா மனமே அறத்திற்கு அடிப்படை
  காரணம் (R) : மனம் தூயதாயிருப்பின் வெளிக்கோலம் வேண்டாதது ஆகிவிடும். மனம்
  தீயதாக இருப்பின் வெளிக்கோலம் பிறரை ஏமாற்றுவதாக ஆகிவிடும்.
  இருவழிகளினாலும் பயனின்மை நோக்கி வெளிக்கோலத்தை வீண்
  ஆரவாரமென்றார்.
  (A) கூற்று (A), காரணம் (R) இரண்டும் தவறு. இவை குறளை விளக்குவன அல்ல
- B. கூற்று (A) சரி, காரணம் (R) தவறு
- C. கூற்று (A) தவறு; காரணம் (R) சரி

- D. கூற்று (A), காரணம் (R) இரண்டும் சரி, இவை குறளின் பொருளைச் சரியாக விளக்குகின்றன
- E. விடை தெரியவில்லை

99) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணைகளைக் கண்டறிக
1. “ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்” - மண்ணியல் அறிவு
2. “வறிது நிலைஇய காயமும்” - விண்ணியல் அறிவு
3. “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது” - மருத்துவ அறிவு
4. “செம்புலப் பெயல் நீர் போல” - கனிமவியல் அறிவு

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 4
- C. 1 மற்றும் 4
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

100) பசியென்னும் கொடிய நோய் யாரை அணுகுவதில்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

- A. தவமுடையோரை
- B. அருளுடையோரை
- C. புகழுடையோரை
- D. பகிர்ந்து உண்ணுவோரை
- E. விடை தெரியவில்லை

101) “பெற்றியார்ப் பேணிக் கொளல்” - இக்குறளடியில் “பெற்றியார்” யார்?

- A. வந்த துன்பத்தை நீக்குபவர்
- B. தலைசிறந்த கல்வியாளர்கள்
- C. இடர் வரும் முன் காப்பவர்
- D. A & C
- E. விடை தெரியவில்லை

102) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நீதியை வலியுறுத்தும் நூல்களின் எண்ணிக்கை யாது?

- A. பதினொன்று
- B. பத்து
- C. ஆறு
- D. ஒன்பது
- E. விடை தெரியவில்லை

103) ‘படுபயனும் பார்த்துச் செயல்’ என்று திருக்குறள் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. செயலின் முடிவு
- B. ஏற்படும் இடையூறுகள்
- C. விளைவுகள்
- D. A, B மற்றும் C
- E. விடை தெரியவில்லை

104) கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிகண்டு நூல் எது?

- A. சேந்தன் திவாகரம்
- B. தொகை நிகண்டு
- C. கைலாச நிகண்டு
- D. பாரதிதீபம்
- E. விடை தெரியவில்லை

105) பகையத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் - இக்குறளில், எளியர், அரியர் என்பவற்றின் பொருள்கள் எவை?

- A. சிலர், பலர்
- B. சிறியர், பெரியர்
- C. சிலர், பெரியர்

- D. பலர், சிலர்
- E. விடை தெரியவில்லை

106) கீழ்க்கண்டவற்றுள் கி.வா.ஜகந்நாதன் நூல்களில் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. அன்பின் உருவம்
- B. அதியமான் நெடுமான் அஞ்சி
- C. ஞானமாலிகா
- D. அழியா அழகு
- E. விடை தெரியவில்லை

107) கீழ்க்கண்டவற்றுள் கண்ணதாசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் வாழ்ந்த காலம் ஜூன் 24,1927 முதல் அக்டோபர் 17,1981.
2. இவரை வீட்டில் நாராயணன் என்ற பெயரில் வாழ்ந்தார்.
3. இவர் சண்டமாருதம், திருமகள், தென்றல், தென்றல்திரை, முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தார்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

108) கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல் எது?

- A. சதுரகராதி
- B. தேம்பாவணி
- C. வேதியர் ஒழுக்கம்
- D. இரட்சணிய யாத்திரிகம்
- E. விடை தெரியவில்லை

109) கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் ______ இல் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. உண்மையும்
- B. பொய்மையும்
- C. வளமையும்
- D. இன்மையும்
- E. விடை தெரியவில்லை

110) இவ்வுலகில் இன்புற்று வாழ்பவர் எவரென்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. அன்போடு இணைந்து வாழ்பவர்
- B. அருளோடு பொருந்தி வாழ்பவர்
- C. கண்ணோட்டத்துடன் வாழ்பவர்
- D. ஒழுக்கத்துடன் வாழ்பவர்
- E. விடை தெரியவில்லை

111) கூற்று 1 : பாவலரேறு பெருஞ்சித்திரனார் ‘தமிழ் நிலம்’ என்ற இதழைத் தேவநேய
பாவாணருடன் இணைந்து தொடங்கினார்
கூற்று 2 : பெருஞ்சித்திரனார் ‘தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு’
நடத்தினார்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

112) கல்வியாளர்கள் மேலும் மேலும் கல்வியையே விரும்புவர். ஏன்?

- A. கல்வியால் தாங்கள் பெற்ற பயனால்

- B. தங்களின் கல்வியால் உலகம் பெற்ற பயனால்
- C. கல்வி அழியாத செல்வம
- D. கல்வி ஏழு தலைமுறைக்கும் பயனளிப்பதால்
- E. விடை தெரியவில்லை

113) முடியரசனின் ‘பூங்கொடி’ காவியம் தமிழக அரசின் பரிசைப் பெற்ற ஆண்டு எது?

- A. 1986
- B. 1966
- C. 1976
- D. 1988
- E. விடை தெரியவில்லை

114) கூற்று 1 : ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள் கிளை மொழி எனப்படுகிறது.
கூற்று 2 : ஒரு மொழியைப் பேசுபவர்களுக்கு இடையே வேறுபட்டுக் காணப்படும் பேச்சுவழக்கையே மொழியியலார் ‘வட்டார மொழி’ என்று கூறுகின்றனர்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

115) கீழ்க்கண்ட எவருடைய வறுமையை இவ்வுலகம் கேடானது என்று சொல்லாது?

- A. நல்லவரின் வறுமை
- B. கல்வியாளரின் வறுமை
- C. தீயவரின் வறுமை
- D. நடுநிலையாளரின் வறுமை
- E. விடை தெரியவில்லை

116) கணைகொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன
வினைபடு பாலால் கொளல் - இக்குறட்பா வெளிப்படுத்தும் உட்கருத்து யாது?

- A. ஒருவரை அவரது தோற்றத்தால் அளவிட வேண்டும்.
- B. ஒருவரைத் தோற்றத்தாலும் செயலாலும் மதிப்பிட வேண்டும்.
- C. ஒருவரை அவரது செயல்களால் மதிப்பிட வேண்டும்.
- D. ஒருவரின் உறவுகளை வைத்து அளவிட வேண்டும்.
- E. விடை தெரியவில்லை

117) கீழ்க்காணும் இணைகளில் எத்தனை தவறாகப் பொருந்தியுள்ளன?
(நிகண்டு) (ஆசிரியர்)
1. ஆசிரிய நிகண்டு - ஆண்டிப் புலவர்
2. வடமலை நிகண்டு - ஈசுரபாரதியார்
3. பாரதிதீபம் - திருவேங்கடம்
4. அரும்பொருள் விளக்க நிகண்டு - கைலாசர்

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

118) கல்லாதவனின் தகுதி எப்போது வெளிப்பட்டு விடும்?

- A. நல்லவருடன் உரையாடுகையில்
- B. தற்பெருமை கொள்ளும்போது
- C. புறம்பேசித் திரியும்போது
- D. கற்றவரிடம் கூடிப் பேசும்போது
- E. விடை தெரியவில்லை

119) பாவாணர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. “மன்னிப்பு என்பது உருதுச் சொல், ‘பொறுத்துக் கொள்க’ என்பதே சரியான தமிழ்ச்சொல்” என்று கூறினார்.
2. “எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு” என்று மன உறுதியுடன் கூறியவர்
3. இவர் ‘தமிழ்த்தேசியத்தின் தந்தை’ என்று அழைக்கப்படுகிறார்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

120) “வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்” - இக்குறளின் படி மன்னனுக்கு வெற்றியைத் தருவது என வள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. ஈட்டி
- B. செங்கோல்
- C. வேல்
- D. நற்பண்பு
- E. விடை தெரியவில்லை

121) “தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக் குடும்பத்திற்கு உரியமொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி” என்று தமிழுக்குப் புகழாரம் சூட்டியவர் யார்?

- A. பிரான்சிஸ் எல்லீஸ்
- B. இராபர்ட் கால்டுவெல்
- C. மாக்சு முல்லர்
- D. வில்லியம் ஜோன்ஸ்
- E. விடை தெரியவில்லை

122) நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் - பண்புடைமை உடையவர்கள் எவற்றை விரும்புவர்?

- A. நேர்மை மற்றும் நன்மை
- B. நேர்மை மற்றும் செல்வம்
- C. அறிவு மற்றும் கூர்மை
- D. பண்பு மற்றும் பணிவு
- E. விடை தெரியவில்லை

123) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. திரிகடுகம்
- B. நாலடியார்
- C. சிறுபஞ்சமூலம்
- D. ஏலாதி
- E. விடை தெரியவில்லை

124) கீழ்க்கண்டவற்றுள் கண்ணதாசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவரைத் திரைப்படத்துறைக்கு அறிமுகப்படுத்தியவர் ராம்நாத்.
2. இவரின் முதல் திரையிசைப் பாடல் கண்ணே கலைமானே.
3. இவர் தலைசிறந்த பாடலாசிரியருக்கான மத்திய அரசின் தேசிய விருதினை 1979-ஆம் ஆண்டு பெற்றார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

125) கீழ்க்காணும் இணைகளில் தவறானது எது?
சான்றோர் பிறந்த ஊர்

- A. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் - சிந்தாதிரிப்பேட்டை

- B. உ.வே. சா - உத்தமதானபுரம்
- C. சி. இலக்குவனார் - சிவகங்கை
- D. தேவநேயப் பாவாணர் - சங்கரன் கோவில்
- E. விடை தெரியவில்லை

126) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. கெடுங்காலைக் கேண்மை கைவிடுவார் அடுங்காலை
  உள்ளினும் உள்ளஞ் சுடும்.
- B. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை உள்ளம்
  அடுங்காலை உள்ளஞ் சுடும்.
- C. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
  உள்ளினும் உள்ளஞ் சுடும்.
- D. கெடுங்காலைக் கேண்மை கைவிடுவார் உள்ளம்
  அடுங்காலை உள்ளினும் சுடும்.
- E. விடை தெரியவில்லை

127) கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல் - இக்குறள் பயின்று வரும் திருக்குறளின் அதிகாரம்
எது?

- A. புறங்கூறாமை
- B. இன்னா செய்யாமை
- C. பயனில் சொல்லாமை
- D. இனியவை கூறல்
- E. விடை தெரியவில்லை

128) பொருத்துக. (நூல் ஆசிரியர்கள்)
(a) டி.கே.சி 1. கோசலக் குமாரி
(b) தமிழ்ஒளி 2. கம்பர் யார்?
(c) கி.வா.ஜகந்நாதர் 3. திருவருட்சிந்தனை
(d) குன்றக்குடி அடிகளார் 4. அப்பர் தேவார அமுது

- A. 2 1 3 4
- B. 2 3 4 1
- C. 2 1 4 3
- D. 4 1 3 2
- E. விடை தெரியவில்லை

129) கூற்று I : சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம்
நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும்
சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன.
கூற்று II : முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம்
நூற்றாண்டுக்கு முன்பு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய
தமிழெழுத்துகள் காணப்படுகின்றன

- A. கூற்று I மட்டும் தவறு
- B. கூற்று II மட்டும் தவறு
- C. கூற்று இரண்டும் தவறு
- D. கூற்று இரண்டும் சரி
- E. விடை தெரியவில்லை

130) “கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி” - என்ற சிலப்பதிகார அடிகள் பின்வருவனவற்றில் எதனைச்
சிறப்பாகக் குறிப்பிடுகிறது?

- A. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள்
- B. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் அடையாள எழுத்துகள்
- C. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் குறியீட்டு எழுத்துகள்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

131) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) பூரியார் 1. ஆராய்ந்து

(b) நாடி 2. சாட்சி
(c) அல்லல் 3. இழிந்தார்
(d) கரி 4. தீயவை
(e) அல்லவை 5. துன்பம்

- A. 1 2 3 4 5
- B. 3 1 5 4 2
- C. 5 4 3 2 1
- D. 3 1 5 2 4
- E. விடை தெரியவில்லை

132) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து - இக்குறட்பாவில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருள்கள் முறையே,

- A. மனவலிமையுடையோர், விலகமாட்டார், சிறப்பு
- B. மனவலிமையுடையோர், விலகமாட்டார், உயர்வு
- C. விலகமாட்டார், மனவலிமையுடையோர், இன்பம்
- D. விலகமாட்டார், மனவலிமையுடையோர், துன்பம்
- E. விடை தெரியவில்லை

133) இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை - இக்குறட்பாவில் ‘விருந்தொரால்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

- A. விருந்து + தொரால்
- B. விருந்து + ஒரால்
- C. விருந்து + ஒரு + ஆல்
- D. விருந் + தொரால்
- E. விடை தெரியவில்லை

134) “புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்
புலம் மிக்கவர்க்கே புலனாம்” - இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. நாலடியார்
- B. நான்மணிக்கடிகை
- C. திருக்குறள்
- D. பழமொழி நானூறு
- E. விடை தெரியவில்லை

135) கீழ்க்கண்டவற்றுள் கண்ணதாசன் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் எழுதிய முதல் காவியம் இயேசு காவியம்.
2. இவர் கதை வசனம் எழுதிய திரைப்படம் மூன்றாம் பிறை.
3. இவர் எழுதிய இறுதிக் காவியம் மாங்கனி.
4. இவருக்குச் சென்னையில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

136) கூற்று 1 : தமிழ் மொழியியல் கழகத்தின் முதல் தலைவராக
தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் இருந்தார்
கூற்று 2 : இவருக்கு “நடமாடும் பல்கலைக்கழகம்” என்று திரு.வி. க சிறப்புப் பெயர்
சூட்டியுள்ளார்

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

137) ‘உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு’ - இக்குறளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருள்கள் முறையே ________, ________

- A. மனம், செல்வம்
- B. சிந்தனை, செல்வம்
- C. ஊக்கம், செல்வம்
- D. பொறுமை, செல்வம்
- E. விடை தெரியவில்லை

138) “சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று” - என்று வள்ளுவம் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. கல்லாமையை
- B. கள்ளாமையை
- C. விருந்தினரைத் தவிர்த்து உண்பது
- D. புறங்கூறுதல்
- E. விடை தெரியவில்லை

139) “கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. புதியதொரு விதி செய்வோம்
- B. யார் கவிஞன்?
- C. வீரகாவியம்
- D. பாவியக் கொத்து
- E. விடை தெரியவில்லை

140) ஒருவரின் வாழ்நாள் வழியடைக்கும் கல் என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. உடல் நலம்
- B. உள்ள நலம்
- C. A மற்றும் B
- D. அறச்செயல்கள்
- E. விடை தெரியவில்லை

141) நல்ல குடும்பத்தில் பிறந்தோரின் பண்பாகத் திருக்குறள் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. கேட்காதவர்க்கும் கொடுத்தல்
- B. இரந்தவர்க்கு இல்லை என்னாமல் கொடுத்தல்
- C. உறவினர்க்கு மட்டும் உதவுதல்
- D. நண்பர்க்குக் கொடுத்தல்
- E. விடை தெரியவில்லை

142) “கெடுப்பார் இலானும் கெடும்” மன்னன் யார்?

- A. தக்கார் இனம் சேராதார்
- B. மதலையாம் சார்பு இல்லாதவர்
- C. நல்லார் நட்பை விட்டவன்
- D. இடிப்பார் இல்லாதவன்
- E. விடை தெரியவில்லை

143) ‘இரட்டை வழக்கு மொழி’ என்ற பதம் பின்வரும் கூற்றுகளில் எதனைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது?

- A. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இல்லாமல் இருத்தல்
- B. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருத்தல்
- C. தாய் மொழிக்கும் கிளை மொழிக்கும் இடையே வேறுபாடு இல்லாமல் இருத்தல்
- D. தாய் மொழிக்கும் கிளை மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருத்தல்
- E. விடை தெரியவில்லை

144) “தீயெச்சம் போலத் தெறும்” என்று திருவள்ளுவர் கூறுவன எவை?

- A. வினையெச்சம்
- B. புகழெச்சம்
- C. பகையெச்சம்
- D. A மற்றும் C
- E. விடை தெரியவில்லை

145) பல நூல்களைக் கற்றும் பயனில்லாதவர் என்று திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

- A. முறையறிந்து பேசத் தெரியாதவர்
- B. அவையின் தன்மையறிந்து பேசாதவர்
- C. அவையறிந்து பேசும் திறனுள்ளவர்
- D. கற்றவர் அவையில் பேசத் தெரியாதவர்
- E. விடை தெரியவில்லை

146) கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமான பழமொழியைக் கண்டறி ‘கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா’.

- A. ஞாயிறைக் கைமறைப்பார் இல்
- B. முள்ளினால் முள்களையும் ஆறு
- C. ஆற்றுணா வேண்டுவது இல்
- D. பாம்பு அறியும் பாம்பின் கால்
- E. விடை தெரியவில்லை

147) “போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. வாலி
- C. முடியரசன்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

148) “மண்ணோடு இயைந்த மரத்தனையர்” - இக்குறளடியில் பயிலும் அணிநயம் எது?

- A. உருவக அணி
- B. உவமையணி
- C. தற்குறிப்பேற்ற அணி
- D. நிரல்நிறையணி
- E. விடை தெரியவில்லை

149) கீழ்க்காணும் குறளடி இணைகளில் தவறானது எது?

- A. அன்பிலார் - தமக்குரியர்
- B. அன்பின் வழியது - உயிர்நிலை
- C. அன்பகத்தில்லா - ஆர்வம் உடைமை
- D. என்பிலதனை - அன்பிலதனை
- E. விடை தெரியவில்லை

150) “கடையரே கல்லாதவர்” என வள்ளுவர் குறிப்பிடுவது யாரை?

- A. செல்வர் முன் வறியவர் போல் கற்றவரிடம் சென்று கல்வி பயிலாதார்
- B. கற்பவற்றைக் கசடறக் கற்காதவர்
- C. உலகமே பயனுறும் கல்வி கற்காதவர்
- D. அழிவில்லாச் செல்வமான கல்வி கற்காதவர்
- E. விடை தெரியவில்லை

151) கூற்று 1 : இந்தியாவில் பேசப்படும் மொழிகள் நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கப்படுகின்றன
கூற்று 2 : இந்தியாவில் திராவிட மொழிகள் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகின்றன

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

152) “நெஞ்சம் நடுவொரீஇ அல்ல செயின்” - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. நடுநிலை தவறி
- B. நடுநிலையோடு
- C. உள்ளன்புடன்
- D. வெளிப்படையாக
- E. விடை தெரியவில்லை

153) பொருத்துக (குறள் - சொல்லும் பொருளும்)
(a) பெற்றம் 1. பறவை
(b) புதல் 2. கொடியவர்
(c) புள் 3. புதர்
(d) படிறு 4. பசு
(e) வன்கணார் 5. வஞ்சம்

- A. 1 2 3 4 5
- B. 3 4 1 2 5
- C. 4 3 1 5 2
- D. 2 5 4 1 3
- E. விடை தெரியவில்லை

154) உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்கிய பெருஞ்சித்திரனாரின் இதழ்கள் எவை?

- A. பாவியக்கொத்து. ஐயை, கொய்யாக்கனி
- B. மணிமொழி மாலை, பறவைகளுக்கு, குஞ்சுகளுக்கு
- C. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம்
- D. தமிழ் நிலம், ஐயை, கனிச்சாறு
- E. விடை தெரியவில்லை

155) நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

- A. தொழில்நுட்பத்திறன்
- B. உலகியலறிவு
- C. நுண்ணறிவுத் திறன்
- D. பொது அறிவுத்திறன்
- E. விடை தெரியவில்லை

156) குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல் - இக்குறளின் படி ஒரு மன்னனின் தொழில் அல்லது கடமையாகக் கருதப்படுவது எது?

- A. போர்க்களத்தில் வெற்றி பெறுதல்
- B. செல்வத்தைப் பெருக்குதல்
- C. குடிகளைப் பாதுகாத்துக் குற்றங்களைத் தண்டித்தல்
- D. கலைகளை வளர்த்தல்
- E. விடை தெரியவில்லை

157) கூற்று 1 : “இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்” என்று தமிழைப் பிங்கல
நிகண்டு பெருமைப்படுத்துகிறது
கூற்று 2 : கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு
கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும்
கலையே சிற்பக்கலை என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

158) “பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்” - இக்குறளடிக்கு இணையான புறப்பாடல் எது?

- A. ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
- B. உலகம் என்பது உயர்ந்ததன் மேற்றே

- C. உண்டால் அம்ம இவ்வுலகம்
- D. தீதும் நன்றும் பிறர்தர வாரா
- E. விடை தெரியவில்லை

159) ஒருவனின் இறப்புக்குக் காரணமான துன்பத்தைத் தருவது எது என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. மனம்போன போக்கில் வாழ்வது
- B. விரும்பியபடி நடப்பது
- C. ஆராயாமல் கொள்ளும் நட்பு
- D. தீயவழியில் நடத்தல்
- E. விடை தெரியவில்லை

160) கீழ்க்கண்டவற்றுள் கண்ணதாசன் சிறப்புப்பெயர்களில் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. ஆரோக்கியசாமி
- B. குழந்தை மனம் கொண்ட கவிஞர்
- C. கவிச்சக்ரவர்த்தி
- D. கவியரசு
- E. விடை தெரியவில்லை

161) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) நகை 1. சிறுமை
(b) புன்மை 2. அயலார்
(c) துன்னியார் 3. சிரிப்பு
(d) ஏதிலார் 4. நிலைபெற்ற
(e) மன்னும் 5. பழகியவர்

- A. 1 2 3 4 5
- B. 3 1 5 4 2
- C. 5 4 3 2 1
- D. 3 1 5 2 4
- E. விடை தெரியவில்லை

162) "தன்னுயிர் அஞ்சும் வினை" எவருக்கு இல்லை?

- A. உறவுகளிடம் அன்புடையவர்க்கு
- B. நண்பர்களிடம் பரிவுடையவர்க்கு
- C. உதவி செய்து வாழ்வோருக்கு
- D. உயிர்களைப் போற்றி அருள் ஆள்வார்க்கு
- E. விடை தெரியவில்லை

163) கீழ்க்கண்டவற்றுள் சாகித்ய அகாதமி விருது பெற்ற நூல்களில் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908
- B. பூங்கொடி
- C. தமிழ் இன்பம்
- D. வீரர் உலகம்
- E. விடை தெரியவில்லை

164) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. ஒழுக்கம் உடையவர்க் தீய வழுக்கியும்
  கொல்லாவே வாயாற் சொலல்.
- B. ஒழுக்கம் கொல்லாவே வழுக்கியும் தீய
  உடையவர் வாயாற் சொலல்.
- C. ஒழுக்கம் கொல்லாவே வாயாற் தீய
  வழுக்கியும் உடையவர் சொலல்.
- D. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
  வழுக்கியும் வாயாற் சொலல்.
- E. விடை தெரியவில்லை

165) "இவ்வுலகம் பொன்னைப் போல் போற்றும்" என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

- A. பிறரைப் புறங்கூறிப் பேசாதவரை
- B. நற்பண்புகள் உடையாரை
- C. பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்தாரை
- D. பிறரின் தீமைக்காக அவரைத் தண்டித்தவரை
- E. விடை தெரியவில்லை

166) பின்வருவனவற்றைப் பொருத்துக
(தமிழின் பண்பு) (தன்மை)
(a) குமரிக்கண்டத்தில் தமிழ் மொழித் தோற்றம் 1. மும்மை
(b) முப்பதே ஒலிகளை மட்டுமே கொண்டு இயங்கும் தமிழ் 2. வளமை
(c) யானையைக் குறிக்கும் 65 வகை பெயர்கள் 3. தொன்மை
(d) இயல், இசை நாடகம் என இயங்கும் தன்மை 4. எளிமை

- A. 2 4 3 1
- B. 2 1 3 4
- C. 3 1 2 4
- D. 3 4 2 1
- E. விடை தெரியவில்லை

167) "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்" - இக்குறளடியில் குறிப்பிடப்படும் 'அதர்' என்ற சொல்லின் பொருள் யாது?

- A. நிலம்
- B. காற்று
- C. வழி
- D. நீர்
- E. விடை தெரியவில்லை

168) "எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து" - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. சிறுபஞ்சமூலம்
- B. பழமொழி நானூறு
- C. மூதுரை
- D. நாலடியார்
- E. விடை தெரியவில்லை

169) எவருடைய நிலம் விதையின்றி விளையும் என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. இரக்கமுடையோரின் நிலம்
- B. விருந்தோம்புவாரின் நிலம்
- C. வள்ளல்களின் நிலம்
- D. அன்புடையவரின் நிலம்
- E. விடை தெரியவில்லை

170) "அன்றறிவாம் என்னாது அறம்செய்க" - இக்குறளடியில் வள்ளுவர் குறிப்பிடுவது எதனை?

- A. இளமையில் அறம் செய்க.
- B. அறம் செய்யக் காலநேரம் தேவையில்லை
- C. வாய்ப்பு கிடைக்கும்போது அறம் செய்க.
- D. குறிப்பிட்ட காலத்தில் அறம் செய்து விடுக
- E. விடை தெரியவில்லை

171) செல்வர்கள் தங்கள் செல்வத்தைச் சேமிக்கும் வங்கியெனத் திருக்குறள் எதனைக் குறிப்பிடுகிறது?

- A. அரசுக் கருவூலம்
- B. அரசுத்துறை வங்கிகள்
- C. ஏழைகளின் வயிறு
- D. A, B மற்றும் C
- E. விடை தெரியவில்லை

172) அரியவற்றுள் எல்லாம் அரிதே _______
பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவில் விடுபட்ட சீரைக் கண்டறிக.

- A. சிறியவரைப்
- B. பெரியாரைப்
- C. உறவினரை
- D. நண்பனை
- E. விடை தெரியவில்லை

173) “இருந்தாலும் இறந்தவர்க்குச் சமம்” என்று எவரைத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. பேசும் பேச்சு அறியாதவர்
- B. அவையில் பேச அறியாதவர்
- C. கற்றவரின் கூட்டத்துக்கு அஞ்சுபவர்
- D. கற்றவரின் கூட்டத்துக்கு அஞ்சாதவர்
- E. விடை தெரியவில்லை

174) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அற இலக்கியங்கள் எவ்வகை ஓசையில் அமைந்துள்ளன?

- A. அகவலோசை
- B. தூங்கலோசை
- C. செப்பலோசை
- D. துள்ளலோசை
- E. விடை தெரியவில்லை

175) கண்ணிற்கு அணிகலன் என்று திருக்குறள் குறிப்பிடுவது எதனை?

- A. இமைகள்
- B. இரக்கம்
- C. ஈகை
- D. மறம்
- E. விடை தெரியவில்லை

176) மனதில் அன்பின்றி வாழும் வாழ்க்கை எதனைப் போன்றது?

- A. ஒரே இல்லத்தில் பாம்புடன் வாழ்வது போல
- B. என்பும் தோலும் போர்த்த உடம்பு போன்றது
- C. மண்ணால் ஆன பொம்மையைப் போன்றது
- D. பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்ப்பது போல
- E. விடை தெரியவில்லை

177) ‘அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்?’ - இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. பழமொழி நானூறு
- B. நாலடியார்
- C. திருக்குறள்
- D. ஆசாரக் கோவை
- E. விடை தெரியவில்லை

178) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணிநயம் எது?

- A. எடுத்துக்காட்டு உவமையணி
- B. உவமையணி
- C. உருவகவணி
- D. நிரல்நிறையணி
- E. விடை தெரியவில்லை

179) “யார் காப்பார்” என்றுத் தமிழன்னை ஏங்கிய போது “நான் காப்பேன்” என்று எழுந்தார் ஒருவர், அவர் யார்?

- A. உ.வே.சா
- B. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்
- C. சி. இலக்குவனார்
- D. தேவநேயப்பாவாணர்

- E. விடை தெரியவில்லை

180) எவரை இரக்கமற்றவர் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. புறக்கோலத்தில் துறவியரைப் போன்றவரை
- B. மனம் முழுக்க மாசுடையாரை
- C. தோற்றத்தில் மட்டும் துறவியரை
- D. பற்றுகளைத் துறந்தவர் போல நடிப்பவரை
- E. விடை தெரியவில்லை

181) பொருத்துக (திருக்குறள் - சொல்லும் பொருளும்)
(a) ஒட்பம் 1. தரிசு நிலம்
(b) தகைமை 2. அழகு
(c) களர் 3. அறிவு
(d) நுழை புலம் 4. நுண்ணறிவு
(e) எழில் 5. மதிப்பு

- A. 3 5 1 4 2
- B. 3 4 1 2 5
- C. 4 3 1 5 2
- D. 1 2 3 4 5
- E. விடை தெரியவில்லை

182) உ.வே.சா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. சென்னைப் பல்கலைக்கழகத்தில் உ.வே.சா ஆற்றிய சொற்பொழிவே 'சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்' எனும் நூலாக வெளியிடப்பட்டது.
2. "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் ராஜாஜி.
3. ஏட்டில் புதைந்து கிடந்த தமிழை நாடறியச் செய்த பெருமை இவரையே சாரும்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

183) அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படை எது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. அரசனின் செங்கோல்
- B. கண்ணோட்டம்
- C. நடுவுநிலைமை
- D. ஒழுக்கம்
- E. விடை தெரியவில்லை

184) உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணிநயம் யாது?

- A. உவமை அணி
- B. பிறிதுமொழிதல் அணி
- C. எடுத்துக்காட்டு உவமை அணி
- D. இல்பொருள் உவமை அணி
- E. விடை தெரியவில்லை

185) அகராதியின் வகைகளில் தவறானவை எவை?
1. சிறுவர்க்கான அகராதிகள்
2. எதுகை மோனை அகராதிகள்
3. மரபுத்தொடர் அகராதிகள்
4. பழமொழி அகராதிகள்
5. ஒரு பொருட் பன்மொழி அகராதிகள்
6. எதிர்ச்சொல் அகராதிகள்

- A. 3 மற்றும் 4
- B. 3 மட்டும்
- C. 1, 2 மற்றும் 5

- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

186) அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும் - இக்குறளடியில் ‘புன்மை’ என்ற சொல்லின் எதிர்ச்சொல்லைத் தேர்க.

- A. இழிவு
- B. சிறுமை
- C. பெருமை
- D. உயர்வு
- E. விடை தெரியவில்லை

187) அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு - இக்குறளில் பயிலும் அணிவகை யாது?

- A. எடுத்துக்காட்டுவமையணி
- B. ஒட்டணி
- C. உவமையணி
- D. வேற்றுமையணி
- E. விடை தெரியவில்லை

188) பொருத்துக.
ஆசிரியர் நூல்
(a) முடியரசன் 1. சரவண சுந்தரம்
(b) தமிழ் ஒளி 2. பாடுங்குயில்
(c) கி.வா.ஜகந்நாதன் 3. மே தினமே வருக
(d) வெ. இராமலிங்கனார் 4. அறுந்த தந்தி

- A. 4 3 2 1
- B. 2 3 4 1
- C. 2 3 1 4
- D. 1 2 3 4
- E. விடை தெரியவில்லை

189) கீழ்க்கண்ட எவரிடம் செல்வம் நிலைக்காது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

- A. இரக்கம் இல்லாதோரிடம்
- B. நற்பண்பு இல்லாதவரிடம்
- C. பொறாமையுடையவரிடம்
- D. கோழைகளிடம்
- E. விடை தெரியவில்லை

190) எப்படிப்பட்டவரை இந்த உலகம் ஒரு பொருட்டாக மதிக்காது என்று திருக்குறள் குறிப்பிடுகிறது?

- A. அடக்கம் உடையவரை
- B. தீமை செய்தவரைத் தண்டிப்பவரை
- C. சினங்கொள்வாரை
- D. புறங்கூறித் திரிவோரை
- E. விடை தெரியவில்லை

191) பொருத்துக.
சான்றோர் இயற்பெயர்
(a) குன்றக்குடி அடிகளார் 1. விஜயரங்கம்
(b) நாமக்கல் கவிஞர் 2. அரங்கநாதன்
(c) முடியரசன் 3. துரைராசு
(d) தமிழ் ஒளி 4. வெ. இராமலிங்கம் பிள்ளை

- A. 3 4 2 1
- B. 1 3 4 2
- C. 3 2 4 1
- D. 2 4 3 1
- E. விடை தெரியவில்லை

192) சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

- A. பிறிது மொழிதல் அணி
- B. இல்பொருள் உவமையணி
- C. வேற்றுமையணி
- D. எடுத்துக்காட்டு உவமையணி
- E. விடை தெரியவில்லை

193) “பலகற்றும் கல்லார் அறிவிலாதார்” என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

- A. நடுநிலைமையற்றவர்
- B. கண்ணோட்டம் இல்லாதவர்
- C. உலகியலுடன் ஒத்து நடவாதார்
- D. மனஅடக்கம் இல்லாதார்
- E. விடை தெரியவில்லை

194) கூற்று 1 : ஜி. யு. போப் விருது என்பது தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்
துறையின் மூலம் ஆண்டுதோறும் அளிக்கப்படும் விருதுகளில்
ஒன்றாகும்.
கூற்று 2 : இவ்விருதினை முனைவர் ஜெ.நாராயணசாமி அவர்கள் 2023-ம் ஆண்டு
பெற்றார்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

195) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
  பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை
- B. அறத்தாறு சிவிகை இதுவென வேண்டா
  ஊர்ந்தான் பொறுத்தானோடு இடை
- C. அறத்தாறு சிவிகை இதுவென வேண்டா
  பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.
- D. அறத்தாறு இதுவென சிவிகை வேண்டா
  ஊர்ந்தான் பொறுத்தானோடு இடை.
- E. விடை தெரியவில்லை

196) தவவலிமை உடையோரை விட மிக வலிமை உடையவர் என்று திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

- A. தம் பசியைப் போக்கும் துறவியர்
- B. நாடாளும் ஆட்சியாளர்கள்
- C. பிறர் பசியைப் போக்குபவர்
- D. மனவுறுதி உடையார்
- E. விடை தெரியவில்லை

197) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் எழுதிய பயண நூல் எது?

- A. யான் கண்ட ஜப்பான்
- B. ஐரோப்பியப் பயணம்
- C. எனது பயண நினைவுகள்
- D. அமெரிக்க அனுபவங்கள்
- E. விடை தெரியவில்லை

198) “வன்மையுள் எல்லாம் தலை” என்று திருக்குறள் எதனைப் பற்றிக் குறிப்பிடுகிறது?

- A. ஆட்சியாளர்க்கு நெருக்கமாதல்
- B. உறவினரைத் தழுவியிருந்தல்
- C. நம்மை விடப் பெரியோரை நட்பாக்குதல்
- D. அன்புடையோரை வசமாக்குதல்

- E. விடை தெரியவில்லை

199) குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு - இக்குறளடியில் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?

- A. பண்புத்தொடர்
- B. உரிச்சொல் தொடர்
- C. பெயரெச்சத் தொடர்
- D. வினையெச்சத் தொடர்
- E. விடை தெரியவில்லை

200) பின்வருவனவற்றுள் முறையான குறட்பாவைத் தேர்க.

- A. பொருளற்றார் பூப்பர் அருளற்றார் ஒருகால்
அற்றார்மற் றாதல் அரிது.
- B. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.
- C. பொருளற்றார் அற்றார்மற் றாதல் அருளற்றார்
பூப்பர் ஒருகால் அரிது.
- D. பொருளற்றார் அருளற்றார் பூப்பர் ஒருகால்
அற்றார்மற் றாதல் அரிது.
- E. விடை தெரியவில்லை